**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்</u>**

முன்னிலை - **திரு.வை.அரங்கசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், வந்தவாசி.**

2026ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10ம் நாள் புதன் கிழமை
**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 17/2014</u>**

**<u>C.N.R. No. TNTM15- 000249-2014</u>**

**<u>அரசுக்காக</u>:-**
காவல் ஆய்வாளர்,
வடவணக்கம்பாடி காவல் நிலையம்,
குற்ற எண். 141/2005. ... குற்றமுறையிடுபவர்

**- எதிர்-**

**சீனுவாசன், (வயது சுமார் 45/2005**
த/பெ. பட்டு,
தட்டாங்குளத்தெரு,
புதுகாலனி, வடவணக்கம்பாடி கிராமம்,
வந்தவாசி தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம். ... எதிரி

<u>CASE SUMMARY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS</u>
IN ROC.No.814/2020/RG/F1, Dated : 07.04.2021

| | | |
|---|---|---|
| 1 | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். | **C. C. No. 17/2014** |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | **<u>அரசுக்காக</u>:-**<br>காவல் ஆய்வாளர்,<br>வடவணக்கம்பாடி காவல் நிலையம்,<br>குற்ற எண். 141/2005. |
| 3 | எதிரிகளின் பெயர், வயது, தந்தையின் பெயர் மற்றும் முகவரி | **சீனுவாசன், (வயது சுமார் 45/2005**<br>த/பெ. பட்டு,<br>தட்டாங்குளத்தெரு,<br>புதுகாலனி, வடவணக்கம்பாடி கிராமம்,<br>வந்தவாசி தாலுக்கா,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4 | எதிரிகளின் தொழில் | விவசாயம் |
| 5 | குற்ற நிகழ்வு நாள் | 02.10.2005 |
| 6 | புகார் அளிக்கப்பட்ட நாள் | 02.10.2005 |
| 7 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 02.10.2005 |

| | | |
|---|---|---|
| 8 | எதிரிகள் ஜாமினில் விடுவிக்கப்பட்ட நாள் | 17.10.2005 |
| 9 | விசாரணை தொடங்கப்பட்ட நாள் | 15.05.2026 |
| 10 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 15.05.2026 |
| 11 | நீதிமன்றத்தின் முடிவு | **(i) எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(aaa) TNP Act-ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**<br><br>**(ii) இவ்வழக்கு சொத்தான C.P.No. 408/2005-ல் கண்ட 350 ML அளவு கொண்ட சாராயத்துடன் கூடிய 2 வெள்ளை நிற கண்ணாடி பாட்டில் மாதிரிகளை இராசாயண பரிசோதனைக்கு பிறகு மீதமுள்ள மாதிரிகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.**<br><br>**(iii) எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.** |
| 12 | எதிரிகளுக்கு தீர்ப்பின் நகல்/ முடிவு தெரிவிக்கப்பட்டதா | ஆம் |
| 13 | காலதாமதத்திற்கான காரணம்:- | இறுதியறிக்கை 04.08.2006 அன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 17.08.2006 ம் தேதி |

| | | |
|---|---|---|
| | | கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 15.05.2026 அன்று இந்த நீதிமன்றத்தால் விசாரணை தொடங்கி, 10.06.2026 அன்று தீர்ப்பு பகரப்பட்டது. அரசு தரப்பில் எதிரிகளுக்கு அழைப்பாணையைசார்வு செய்வதிலும் சாட்சிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்து முன்னிலைப்படுத்தி விசாரணை செய்வதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தரப்பில் நியாயமற்ற தாமதம் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 17.08.2006 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 01.06.2026ம் தேதி இறுதி விசாரனைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-I திரு.D.கிரகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வீராசாமி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களை ஆராயந்தும் இறுதி பரிசீலனைக்கு பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**இறுதியறிக்கையின் சுருக்கும் :**

கடந்த 02.10.2005 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு விளாநல்லூர் காலணியில் எதிரி வீட்டின் பின்புற முட்புதரிடம் எதிரி சீனுவாசன் என்பவர் இரு மண் பானையில் தலா 55 லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் கொண்ட நாட்டுச் சாராயம் வைத்திருந்து விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரி மீது 4(1) (aaa) TNP ACt -ன் கீழ் வடவணக்கம்பாடி காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றச்சாட்டு வனைதல்**

இறுதி அறிக்கையின் பரிசீலினையின் பேரில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரிக்கு எதிராக இதச பிரிவு 4(1) (aaa) TNP Act -ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரனைக்கு உத்திரவிடப்பட்டது.

## 3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு.

அ.சா.1. திரு. பூவண்ணன், தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 02.10.2005 ம் தேதி தானும் புலன் விசாரணை அதிகாரி பிச்சாண்டி, சிறப்பு உதவி ஆய்வாளரும் பட்டியல் சாட்சி 1 தலைமை காவலர் துரை என்பவரும் சுற்று காவலில் இருந்தபோது, பகல் 1.30 மணியளவில் விளாநல்லூர் காலனியில் எதிரி சீனிவாசன் வீட்டின் பின்புறத்தில் உள்ள முட்புதரிடம் அவர் வைத்திருந்த இரு மண் பல்லாவில் விஷவாடையுடன் கூடிய சாராயம் 55 லிட்டர் ஒவ்வொன்றிலும் இருந்தது என்றும், மொத்தம் 110 லிட்டர் அதில் மாதிரிக்காக 350 எம்.எல். வீதம் இரண்டு பாட்டில்களில் எடுத்து மீதம் இருந்த சாராயத்தை அங்கேயே அழித்து மகசர் தயாரிக்கப்பட்டது என்றும், அந்த மகசர் அ.த.சா.ஆ. 1 ஆகும் என்றும், அந்த மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது என்றும், இது சம்பந்தமாக தன்னை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2. திரு. பார்த்திபன், தனது சாட்சியத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர், தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்வதாகவும், தான் கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 02.10.2005 ம்தேதி தானும் அ.சா.1 பட்டியல் சாட்சி பூவண்ணன் மற்றும் தலைமை காவலர் துரை என்பவரும் சுற்று காவலில் இருந்தபோது, பகல் 1.30 மணியளவில் விளாநல்லூர் காலனியில் எதிரி சீனிவாசன் வீட்டின் பின்புறத்தில், உள்ள முட்புதரிடம் எதிரி வைத்திருந்த இரு மண் பல்லாவில் விஷவாடையுடன் கூடிய சாராயம் 55 லிட்டர் ஒவ்வொன்றிலும் இருந்தது என்றும், ஆக மொத்தம் 110 லிட்டர் ஆகும் என்றும், அதில் மாதிரிக்காக 350 எம்.எல். வீதம் இரண்டு பாட்டில்களில் எடுத்து மீதம் இருந்த சாராயத்தை அங்கேயே அழித்து மகசர் தயாரிக்கப்பட்டது என்றும், அந்த மகசர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மாதிரி சாராயம் சா.பொ. 1 ஆகும் என்றும், எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது 4(1)(aaa) r/w 4(1-A) TNP Act -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆகும் என்றும், மாதிரிக்கு எடுக்கப்பட்ட சாராயம் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது என்றும், அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகும் என்றும், பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட சாராயத்தில், மீத்தேன் மற்றும் ஆட்ரோபில் இல்லை என்றும், எனவே, சட்டப்பிரிவை மாற்றி எதிரியின் மீது 4(1)(aaa) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4. அரசு தரப்பில் அ.சா.1 ஆக திரு. பூவண்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அ.த.சா.ஆ.1 கைப்பற்றதல் மகசர், அ.த.சா.ஆ- 2 முதல் தகவல் அறிக்கை , பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.3 சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாபொ. 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சியை முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சியை சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சியை பொய் சாட்சி என கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார்.

6. **தீர்வுக்குரிய பிரச்சனை :-**

**இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.**

**7.** கடந்த 02.10.2005 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு விளாநல்லூர் காலணியில் எதிரி வீட்டின் பின்புற முட்டபுதரிடம் எதிரி சீனுவாசன் என்பவர் இரு மண் பானையில் தலா 55 லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் கொண்ட நாட்டுச் சாராயம் வைத்திருந்து விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரி மீது 4(1) (aaa) TNP Act -ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 வாதிடும்போது அ.சா.1 காவல்துறை சாட்சி ஆவார். எனவே நீதிமன்றம் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கமாறு வாதிட்டார்.

9. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி அ.சா.1 எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் வழக்குச் சொத்துக்களை பரிசோதனைக்காக அனுப்பி தடவியல் துறை அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கையில் மீத்தேன் மற்றும் ஆட்ரோபில் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், மேலும், சிறப்பு உதவி ஆய்வாளர் BNSS-ன் பிரிவு மற்றும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்படி புலன் விசாரணை செய்ய அதிகாரம் இல்லை. எனவே, உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் எதிரி மீது பொய்யான நிலைய புள்ளிக்கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. அ.சா.2. திரு. பார்த்திபன், தனது சாட்சியத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர், தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்வதாகவும், தான் கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 02.10.2005 ம் தேதி புலன் விசாரணை அதிகாரி திரு. பிச்சாண்டி, பூவண்ணன் மற்றும் அ.சா.1 பட்டியல் சாட்சி தலைமை காவலர் துரை என்பவரும் சற்று காவலில் இருந்தபோது, பகல் 1.30 மணியளவில் விளாநல்லூர் காலனியில் எதிரி சீனிவாசன் வீட்டின் பின்புறத்தில், உள்ள

முட்புதரிடம் எதிரி வைத்திருந்த இரு மண் பல்லாவில் விஷவாடையுடன் கூடிய சாராயம் 55 லிட்டர் ஒவ்வொன்றிலும் இருந்தது என்றும், ஆக மொத்தம் 110 லிட்டர் ஆகும் என்றும், அதில் மாதிரிக்காக 350 எம்.எல். வீதம் இரண்டு பாட்டில்களில் எடுத்து மீதம் இருந்த சாராயத்தை அங்கேயே அழித்து மகசர் தயாரிக்கப்பட்டது என்றும், அந்த மகசர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மாதிரி சாராயம் சா.பொ. 1 ஆகும் என்றும், எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது 4(1) (aaa) r/w 4(1-A) TNP Act -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ- 2 ஆகும் என்றும், மாதிரிக்கு எடுக்கப்பட்ட சாராயம் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது என்றும், அந்த அறிக்கை அ.த.சா.ஆ. 3 ஆகும் என்றும், பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட சாராயத்தில், மீத்தேன் மற்றும் ஆட்ரோபில் இல்லை என்றும், எனவே, சட்டப்பிரிவை மாற்றி எதிரியின் மீது 4(1)(aaa)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

Sec.32(c) of the Tamilnadu prohibition Act, an officer seizing illicit liquor must:-

(i) Draw Samples in the presence of a Prohibition officer or a police officer not below the rank of inspector, and

(ii) Destroy the remaining quantity with certificate specifying the total quantity seized, sample, quantity, and quantity destroyed, which must be towarded to the concerned Jurisdictional judicial Magistrate கூறப்பட்டுள்ள நிலையில்,

11. மேலும் எதிரியிடமிருந்து தான் மேற்படி நாட்டு சாராயம் கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபிக்க தனிநபர் பொதுமக்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை. மேலும், எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் நாட்டு சாராயம் மாதிரிக்கு போக மீதமிருந்ததை கொட்டி அழித்துவிட்டதாக கூறியுள்ள நிலையில் அழித்தற்கான அழிப்பு மகசர் தயார் செய்து அதனை இந்நீதிமன்றத்தில் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்துள்ளபோதிலும், எதிரி மீதான அரசு தரப்பின் குற்றச்சாட்டு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

12. அ.சா.1, அ.சா.2 புலன் விசாரணை அதிகாரியின் கீழ் பணிபுரியும் காவலர்களை மட்டும் சாட்சிகளாக சேர்த்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க தனிநபர் சாட்சியம் முன்னிலைப்படுத்தாதினால் அரசு தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்கள் யாரும் வந்து புகார் கொடுக்கவில்லை என்பது

தெரிய வருகிறது. மேலும், பொது மக்களை யாரையும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

14. அ.சா.2. திரு. பார்த்திபன், தனது சாட்சியத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர், தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் பணி செய்வதாகவும், தான் கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 02.10.2005 ம் தேதி புலன் விசாரணை அதிகாரி திரு. பிச்சாண்டி, அ.சா.1 பட்டியல் சாட்சி பூவண்ணன் மற்றும் தலைமை காவலர் துரை என்பவரும் சுற்று காவலில் இருந்தபோது, பகல் 1.30 மணியளவில் விளாநல்லூர் காலனியில் எதிரி சீனிவாசன் வீட்டின் பின்புறத்தில், உள்ள முட்புதரிடம் எதிரி வைத்திருந்த இரு மண் பல்லாவில் விஷவாடையுடன் கூடிய சாராயம் 55 லிட்டர் ஒவ்வொன்றிலும் இருந்தது என்றும், ஆக மொத்தம் 110 லிட்டர் ஆகும் என்றும், அதில் மாதிரிக்காக 350 எம்.எல். வீதம் இரண்டு பாட்டில்களில் எடுத்து மீதம் இருந்த சாராயத்தை அங்கேயே அழித்து மகசர் தயாரிக்கப்பட்டது என்றும், அந்த மகசர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மாதிரி சாராயம் சா.பொ. 1 ஆகும் என்றும், எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது 4(1)(aaa) r/w 4(1-A) TNP Act -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.- 2 ஆகும் என்றும், மாதிரிக்கு எடுக்கப்பட்ட சாராயம் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது என்றும், அந்த அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகும் என்றும், பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட சாராயத்தில், மீத்தேன் மற்றும் ஆட்ரோபில் இல்லை என்றும், எனவே, சட்டப்பிரிவை மாற்றி எதிரியின் மீது 4(1)(aaa) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அனைவரும் காவல்துறை சாட்சியாக இருப்பதனாலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சியங்களை மட்டும் வைத்து எதிரியை தண்டிப்பது என்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும். அ.சா. 1 மற்றும் அ.சா.2 வரையானவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அல்ல என்பதாலும், பொது மக்கள் சாட்சிகளை யாரையும் இவ்வழக்கில் விசாரிக்கப்படாததாலும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது. பிரிவு 4(1)(aaa) TNP Act-ன் கீழ் குற்றங்களுக்கு உண்டான உட்கூறுகள் எதுவும் நிறைவேறியிருப்பதாக அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை.

15. எதிரி மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது அரசு தரப்பின் பொறுப்பாகும். இவ்வழக்கில் எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்படவில்லை. எனவே, எதிரி சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவராகிறார். எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் பிரிவு 4(1)

(aaa) TNP Act-ன்படியான குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

**(i) எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 4(1)(aaa) TNP Act-ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**(ii) இவ்வழக்கு சொத்தான C.P.No. 408/2005-ல் கண்ட 350 ML அளவு கொண்ட சாராயத்துடன் கூடிய 2 வெள்ளை நிற கண்ணாடி பாட்டில் மாதிரிகளை இராசாயண பரிசோதனைக்கு பிறகு மீதமுள்ள மாதிரிகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.**

**(iii) எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் இன்று 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 10ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.06.10 18:40:50 +0530

**நீதித்துறை நடுவர்,**
**வந்தவாசி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

அ.த.சா.1 திரு. பூவண்ணன்
அ.த.சா.2. திரு.பார்த்திபன் (சிறப்பு உதவி ஆய்வாளர்- வடவணக்கம்பாடி காவல் நிலையம்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.த.சா.ஆ.1. கைப்பற்றுதல் மகசர்
அ.த.சா.ஆ.2. முதல் தகவல் அறிக்கை
அ.த.சா.ஆ.3. பகுப்பாய்வு அறிக்கை

**<u>சான்று பொருள் -</u>**

சா.பொ. 1. 350 ML அளவு கொண்ட சாராயத்துடன் கூடிய 2 வெள்ளை நிற கண்ணாடி பாட்டில்கள்

**எதிரி தரப்பு சாட்சிகள்** - இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** - இல்லை

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.06.10 18:41:06 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வந்தவாசி.**

**குறிப்பு.**

1. எந்த சாட்சியும் 3 கேட்பு தினங்களுக்கு மேல் விசாரணை செய்யாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.